**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம். கந்தர்வக்கோட்டை.**
**முன்னிலை: திரு. என். சிவபழனி, B.A., B.L.,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், கந்தர்வக்கோட்டை.**
**2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 20 ஆம் நாள் திங்கள் கிழமை.**
**2057 திருவள்ளுவராண்டு ஸ்ரீ பராபவ வருடம் சித்திரை திங்கள் 7 ஆம் நாள்.**
**STC No.255/2024**
**CNR No.TNPD11-001289-2024**

**1) வெள்ளைச்சாமி,**
**அடைக்கலம்,**
**மட்டங்கால்.** ... எதிரிகள்

/எதிராக/

**காவல் உதவி ஆய்வாளர்,**
கந்தர்வக்கோட்டை காவல் நிலையம்,
குற்ற எண்.752/2021
U/s. 143,283,269,270 IPC r/w 51(b) DM Act ...குற்றமுறையிடுபவர்

இம்மனு 02.09.2023 ஆம் தேதி இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு, அரசுத் தரப்பில் அரசு உதவி வழக்கறிஞர் நிலை 1 அவர்கள் முன்னிலையாகியும், எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜராகாமல் இருந்த நிலையிலும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

உத்தரவு

இவ்வழக்கானது கந்தர்வக்கோட்டை காவல் நிலைய குற்ற எண் 752/2021 காவல் ஆய்வாளர்/உதவி ஆய்வாளர் அவர்களால் தாக்கல் செய்யப்பட்டு, இந்நீதிமன்றத்தில், 02.09.2023 ஆம் தேதியன்று கோப்புக்கு எடுக்கப்பட்டு, STC 168/2023 என்று எண்ணிடப்பட்ட வழக்கில், 13 ஆம் எதிரியான வெள்ளைச்சாமி, த/பெ. அடைக்கலம் என்பவரை 12.06.2024 ஆம் தேதியன்று இவ்வழக்கில் இருந்து பிரித்து, STC 255/2024 என எண்ணிடப்பட்டது. மேற்படி வழக்கின், சாட்சிகளுக்கு சாட்சிய விசாரணைக்காக 27.06.2025 ஆம் தேதி முதல் இன்று வரை அழைப்பாணை சார்பு செய்யப்படாமல், இவ்வழக்கில் எவ்வித முன்னேற்றமும் இன்றி, நிலுவையில் இருந்து வருகிறது. இவ்வழக்கானது, சுருக்கு முறை வழக்கு என்பதாலும், நீதிமன்றத்தால் பலமுறை அழைப்பாணை கொடுக்கப்பட்ட பின்னும் சாட்சிகள் ஆஜர் படுத்தப்படாததால், இவ்வழக்கின் மேல் நடவடிக்கையை நிறுத்தம் (Stoppage of Proceedings) செய்வது என நீதிமன்றம் முடிவு செய்து, நீதிமன்றத்தால் காவல் துணை கண்காணிப்பாளர், புதுக்கோட்டை மற்றும் காவல் ஆய்வாளர், கந்தர்வக்கோட்டை ஆகியோருக்கு கடித எண் 421/2026 நாள் 18.03.2026 மற்றும் 422/2026 நாள் 18.03.2026-இல் அறிவிப்பு அனுப்பப்பட்டது.

அறிவிப்பினை பெற்றுக்கொண்ட காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள், சாட்சிகளை ஆஜர்படுத்தி, அல்லது வழக்கை அடுத்த கட்ட நகர்விற்கு எடுத்து செல்லவில்லை. நீதிமன்றத்தில் ஆஜராகி எவ்வித பதிலும் தெரிவிக்கவில்லை. இவ்வழக்கினை தொடர்ந்து நிலுவையில் வைத்திருப்பின் நீதிமன்றத்தின் நேரம் வீணடிக்கப்படும் என்பதாலும், தொடர்ந்து நிலுவையில் வைத்திருந்தால் எவ்வித பயனும் ஏற்பட வாய்ப்பில்லை என்பதாலும், இவ்வழக்கினை மேல் நடவடிக்கை நிறுத்தம் (Stoppage of Proceedings) செய்வது என்று முடிவு செய்து, இவ்வழக்கின் மேல் விசாரணை நிறுத்தப்படுகிறது. எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டிலிருந்து எதிரியை விடுவித்து உத்தவிடப்படுகிறது.

இந்த உத்தரவு 2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 20 ஆம் நாள் என்னால் அவையறிய பகரப்பட்டது.

SIVAPALANI

Digitally signed by SIVAPALANI
Date: 2026.04.20 15:59:47 -0400

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**கந்தர்வக்கோட்டை.**